HADURT COURT - TRICHY

**இரண்டாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம், திருச்சிராப்பள்ளி.**

**OS No.163/2018**

முன்னிலை – எஸ். கோபிநாதன், பி.எஸ்சி.பி.எல்.,

இரண்டாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி, திருச்சிராப்பள்ளி.

2025 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 29 ஆம் நாள் புதன்கிழமை வாதி தரப்பில் முதலாவது சாட்சியின் வாக்குமூலம் (1969 ம் ஆண்டு 54 விதியின் 9 வது பிரிவின் ஏற்பாட்டின்படி) உதவியாளர் அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : திரு.ரகு | தந்தை பெயர் | : திரு.சண்முகம் |
| ஜாதி | : | கிராமம் | : |
| வட்டம் | : | மதம் | : |
| தொழில் | : | வயது | : |

நாள் : 29.10.2025

**D.W. : 2**

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை :**

| | |
|---|---|
| கேள்வி | உங்கள் பிரமாண வாக்குமூலத்தில் ஜவுளி கடை நடத்துவதாக சொல்லியுள்ளீர்கள் எந்த இடத்தில் எந்த பெயரில் நடத்துகிறீர்கள்? |
| பதில் | ஸ்ரீரங்கம் ராஜ கோபுரம் அருகில் நியூ லெட்சுமி டெக்ஸ்டையில் என்ற பெயரில் நடத்துகிறேன். |
| கேள்வி | எத்தனை வருடமாக நடத்துகிறீர்கள்? |
| பதில் | கடந்த 20 வருடங்களாக. |
| கேள்வி | உங்கள் வயது என்ன? |
| பதில் | 60 வயது. |
| கேள்வி | 2010 ம் வருடம் உங்கள் வயது 45 என்றால்? |
| பதில் | சரிதான். |
| கேள்வி | 2010 ம் ஆண்டு நீங்கள் சொந்தமாக காரும், இருசக்கர வாகனமும் வைத்து இருந்தீர்கள்? |
| பதில் | இல்லை. இருசக்கர வாகனம் மட்டும் வைத்து இருந்தேன். |

HADUCHOLARSHIP, YHA

| | |
|---|---|
| கேள்வி | இந்த வழக்கில் ஜகதீஸ்வரன், ஆறுமுகம், ஐயப்பசாமி ஆகிய 1 முதல் 3 பிரதிவாதிகள் உங்கள் உறவினர்கள் என்றால்? |
| பதில் | சரிதான். |
| கேள்வி | உங்களுடைய அக்கா மகள் மகாலெட்சுமியை இந்த வழக்கில் 3ம் பிரதிவாதியாக உள்ள ஐயப்பசாமிக்கு திருமணம் செய்துள்ளீர்கள் என்றால்? |
| பதில் | சரிதான். |
| கேள்வி | ஆக நீங்களும் 3ம் பிரதிவாதி ஐயப்பசாமியும் நெருங்கிய உறவினர் என்றால்? |
| பதில் | சரிதான். எனக்கு 3ம் பிரதிவாதி அண்ணன் முறை வேண்டும். |
| கேள்வி | வாதி மற்றும் பிரதிவாதிகளின் தகப்பனார் கணேசன் உங்களுக்கு தெரியுமா? |
| பதில் | தெரியும். |
| கேள்வி | கணேசன் என்ன தொழில் செய்து கொண்டு இருந்தார்? |
| பதில் | கணேசன் ரேடியோ கடை வைத்து இருந்தார். விவசாயம் மற்றும் அசையா சொத்து சம்பந்தமாக தொழில் செய்தார். |
| கேள்வி | தாவா சொத்துக்கள் அனைத்தும் கணேசன் உடைய சுயசம்பாத்திய சொத்துக்கள் என்றால்? |
| பதில் | சரிதான். |
| கேள்வி | 1 முதல் 3 பிரதிவாதிகள் தனிப்பட்ட முறையில் எந்த தொழிலும் செய்யவில்லை என்றால்? |
| பதில் | சரிதான். அவருடைய அப்பாவிற்கு உதவி செய்தார். |
| கேள்வி | 2010ம் ஆண்டு பிரதிவாதிகளின் தந்தை கணேசனுக்கு வயது என்ன? |
| பதில் | சுமார் 70 வயது இருக்கும். |
| கேள்வி | உங்களை உயிலுக்கு சாட்சி கையெழுத்து செய்ய அழைத்தது 3ம் பிரதிவாதி ஐயப்பசாமி தான் என்றால்? |
| பதில் | இல்லை. கணேசன் தான் என்னை அழைத்தார். அவர் தான் என்னை வண்டியில் வைத்து கூட்டி சென்றார். |
| கேள்வி | கணேசன் எழுதி வைத்த உயிலை நீங்கள் படித்து |

IIADJ.COURTORDHY

| | |
|---|---|
| | பார்த்தீர்களா? |
| பதில் | இல்லை. |
| கேள்வி | அந்த உயிலை டைப் அடித்தது யார் என்று தெரியுமா? |
| பதில் | தெரியாது. |
| கேள்வி | நீங்கள் சாட்சி கையெழுத்து போட்டதாக சொல்லும் கணேசன் எழுதி வைத்த உயில் முத்திரை தாளில் எழுதப்பட்டதால் என்றால்? |
| பதில் | ஆமாம். முத்திரை தாளில் எழுதப்பட்டது. |
| கேள்வி | 2010 ம் ஆண்டு கணேசனுக்கு வயது 78 என்றால்? |
| பதில் | தவறு. 70 வயது தான். |
| கேள்வி | நீங்கள் கணேசன் எழுதி வைத்த உயிலில் சாட்சி கையெழுத்து போடுவதற்கு முன்பு கணேசன் அதற்கு முன்பு எழுதி வைத்த 3 உயில்களில் நீங்கள் சாட்சி கையெழுத்து செய்துள்ளீர்களா? |
| பதில் | இல்லை. |
| கேள்வி | 2010 ம் ஆண்டு உங்களுக்கும் கணேசனுக்கும் வயது வித்தியாசம் என்ன? |
| பதில் | 15 முதல் 20 ஆண்டுகள் வரை இருக்கும். |
| கேள்வி | கணேசன் வயதானவர் நீங்கள் வண்டியை இயக்க அவர் பின்னால் அமர்ந்து வந்தார் என்றால்? |
| பதில் | இல்லை. அவர் தான் வண்டியை இயக்கினார் நான் பின்னால் அமர்ந்து சென்றேன். |
| கேள்வி | நீங்கள் சொல்லும் வண்டி உங்கள் வண்டி தான் என்றால்? |
| பதில் | இல்லை. கணேசனின் வண்டி ஸ்கூட்டி. |
| கேள்வி | கணேசனின் சொத்துக்களை 1 முதல் 3 பிரதிவாதிகள் விற்று உள்ளார்களா? |
| பதில் | தெரியாது. |
| கேள்வி | கணேசனின் கையெழுத்து உங்களுக்கு தெரியுமா? |
| பதில் | தெரியும். |

MADRAS HIGH COURT

| | |
|---|---|
| கேள்வி | வா.த.சா.ஆ–1 ல் முதல் பக்கத்தில் கணேசன் கையெழுத்து உள்ளதாக என்றால்? |
| பதில் | உள்ளது. |
| கேள்வி | பி.வா.சா.ஆ.1 ல் 6 வது பக்கத்தில் உள்ள கையெழுத்து கணேசன் கையெழுத்தா என்றால்? |
| பதில் | இல்லை. |
| கேள்வி | எத்தனை மணிக்கு உயில் பி.வா.த.சா.ஆ.1 எழுதப்பட்டது என்று தெரியுமா? |
| பதில் | ஞாபகம் இல்லை. |
| கேள்வி | எத்தனை மணிக்கு உயில் பி.வா.த.சா.ஆ.1 பதிவு செய்யப்பட்டது? |
| பதில் | மதியம் 02.00 முதல் 03.00 வரை இருக்கும். ஸ்ரீரங்கம் சார்பதிவாளர் அலுவலகத்தில் பதியப்பட்டது. |
| கேள்வி | உங்களுடைய லெட்சுமி டெக்ஸ்டைல்ஸ் கடைக்கு வந்தது தான் கணேசன் அழைத்தார் என்றால்? |
| பதில் | ஆம். |
| கேள்வி | உங்கள் கடையில் இருந்து ஸ்ரீரங்கம் சார்பதிவாளர் அலுவலகம் எவ்வளவு தூரத்தில் இருக்கும்? |
| பதில் | 500 மீட்டர் தொலையில் உள்ளது. |
| கேள்வி | உங்கள் கடையில் இருந்து அங்கு நடந்தே சென்று விடலாம் என்றால்? |
| பதில் | சரிதான். |
| கேள்வி | பி.வா.த.சா.ஆ.1 ல் 2 வது சாட்சியாக யார் கையெழுத்து இட்டார்? |
| பதில் | முருகன். எனக்கு ஒன்று விட்ட சகோதரர். |
| கேள்வி | முருகனை யார் கூப்பிட்டார்? |
| பதில் | கணேசன் தான் கூப்பிட்டார். |
| கேள்வி | முருகனும் அப்பொழுது உங்கள் கடையில் தான் இருந்தார் என்றால்? |
| பதில் | ஆம். |

| | |
|---|---|
| கேள்வி | முருகன் எப்படி பத்திர அலுவலகத்திற்கு வந்தார்? |
| பதில் | நடந்து வந்தார். |
| கேள்வி | பி.வா.த.சா.ஆ 1 உயிலில் கணேசன் கையெழுத்து போட்டதை எத்தனை மணிக்கு பார்த்தீர்கள்? |
| பதில் | சுமார் 01.00 மணி அளவில். |
| கேள்வி | சார் பதிவாளர் அலுவலர் முன்பாக கணேசன் கையெழுத்து போட்டாரா? |
| பதில் | ஆம். |
| கேள்வி | சார் பதிவாளர் அலுவலர் முன்பு பி.வா.த.சா.ஆ.1 ஐ பதிவிற்கு கொடுப்பதற்கு முன்பாகவே நீங்கள் மேற்படி ஆவணத்தில் சாட்சி கையெழுத்து போட்டீர்கள் என்றால்? |
| பதில் | ஆமாம். |
| கேள்வி | இந்த பி.வா.த.சா.ஆ.1 உயில் எழுதும் பொழுது கணேசனுக்கு ஞாபக மறதி வயது முதுமை நோய், நல்ல மனநிலையிலும் உடல் நிலையிலும் இல்லை என்றால்? |
| பதில் | சரியல்ல. |
| கேள்வி | 3 ம் பிரதிவாதி ஐயப்பனுக்கு நீங்கள் நெருங்கிய உறவினர் என்பதால் பொய் சாட்சியம் அளிக்கிறீர்கள் என்றாலும் உங்களது சாட்சியம் நிராகரிக்கப்பட வேண்டும் என்றாலும்? |
| பதில் | சரியல்ல. |

**<u>மறுவிசாரணை</u>** இல்லை.

திறந்த வெளி நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல நேரடியாக என்னால் தட்டச்சருக்கு கூறப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு பின்பு சாட்சிக்கு படித்து காட்டி அவர் சரியென்று ஒப்புக்கொண்ட பின் இன்று 29.10.2025 என் முன்பு கையெழுத்து செய்தார்.

Sd/.Thiru.S.Gopinathan,
இரண்டாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,
திருச்சிராப்பள்ளி.
தேதி: 29.10.2025

MADURAI BENCH COURT TRICHY